செ.வெ.எண்: 74 நாள்: 29.06.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் சுமார் ரூ.44.17 இலட்சம் மதிப்பில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், வாண்டான்விடுதி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று 448 பயனாளிகளுக்கு ரூ.44,17,124/- மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

தமிழக அரசு பொதுமக்களிடமிருந்து குறைகளை மனுக்களாக பெற்று தீர்வுகாணும் நோக்கத்தில் மாதந்தோறும் ஒரு கிராமத்தை தேர்வு செய்து மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் கறம்பக்குடி வட்டம், வாண்டான்விடுதி கிராமத்தில் இன்று (29.06.2016) மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 165 மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இம்முகாமிற்காக பெறப்பட்ட 46 முன் மனுக்களில், 40 மனுக்கள் ஏற்கப்பட்டும், 6 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6வது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்த அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை இலவச மின்சாரம், திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்வு, சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக்கடன் தள்ளுபடி, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 200 யூனிட்களாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 750 யூனிட்களாகவும் உயர்வு உள்ளிட்ட 5 முக்கிய திட்டங்களை கையொப்பமிட்டு உடனடியாக நிறைவேற்றி உள்ளார்கள். மேலும் தமிழகஅரசு அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையான பேருந்து வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் இம்முகாமில் வருவாய்த்துறையின் சார்பில் 174 பயனாளிகளுக்கு ரூ.17,40,000/- மதிப்பில் விலையில்லா வீட்டு மனைப்பட்டாக்களும், 20 பயனாளிகளுக்கு ரூ.240000 மதிப்பில் முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 4 பயனாளிகளுக்கு ரூ.410000 மதிப்பில் விபத்து நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 32 பயனாளிகளுக்கு ரூ.265000மதிப்பில் இறப்பு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 55 பயனாளிகளுக்கு ரூ.475000 மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலையும், 11 பயனாளிகளுக்கு வாரிசு சான்றிதழ்களும், 4 பயனாளிகளுக்கு விதவை சான்றிதழ்களும், 58 பயனாளிகளுக்கு புதிய குடும்ப



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், வாண்டான்விடுதி கிராமத்தில் இன்று (29.6.16) நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சொ.கெங்கையம்மாள், வேளாண் இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.ராஜாத்திதுரை,உட்பட பலர் உள்ளனர்.

அட்டைகளும், 58 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் ஆணைகளும், வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு மானிய விலையில் ரூ.600 மதிப்பில் தென்னங்கன்றுகளும், 2 பயனாளிகளுக்கு ரூ.2348 மதிப்பில் உளுந்து விதைகளும், 1 பயனாளிக்கு ரூ.30500 மதிப்பில் பவர்கோனாவீடர் கருவியும், 1 பயனாளிக்கு ரூ.485 மதிப்பில் பயறு நுண்சத்து இடுபொருளும், 1 பயனாளிக்கு ரூ.412.5 மதிப்பில்

நிலக்கடலை நுண்சத்து இடுபொருளும், 1 பயனாளிக்கு ரூ.153.5 மதிப்பில் நெல் நுண்சத்து இடுபொருளும், 1 பயனாளிக்கு ரூ.1125 மதிப்பில் தென்னை சிவப்பு கூண் வண்டு இனக்கவர்ச்சி பொறி கருவியும், புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 7 ஊராட்சிகளை சேர்ந்த 18 சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.12.40 இலட்சம் மதிப்பில் ஊக்கநிதி, தனிநபர் கடன், அமுதசுரபி நிதியுதவி தொகைக்கான காசோலைகளும், இன்றைய முகாமில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து வரப்பெற்ற மனுக்களில் 1 நபருக்கு ரூ.5500 மதிப்பில் சக்கர நாற்காலியும், 2 நபர்களுக்கு ரூ.3000 மதிப்பில் ஊன்றுகோல்களும், 1 நபருக்கு ரூ.3000 மதிப்பில் காதொலிக்கருவியும் என மொத்தம் 448 பயனாளிகளுக்கு ரூ.44,17,124 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

..2..



இம்முகாமில் சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், கால்நடைபராமரிப்புத்துறை, புதுவாழ்வுத்திட்டம், வேளாண்மைத்துறை ஆகிய துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் தகுதிகள் குறித்து அலுவலர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார்கள்.

மேலும், மழையூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மருத்துவ முகாமில் 120 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், கறம்பக்குடி அரசு மருத்துவமனை சித்தமருத்துவப்பிரிவு சார்பில் நடைபெற்ற சித்த மருத்துவ முகாமில் 450 நபர்களுக்கு நிலவேம்பு குடிநீர் மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கு நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனம் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 656 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், ஆண்மைநீக்கம், தடுப்பூசி, செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் பிற சிகிச்சைகள் வழங்கப்பட்டது.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுசுகாதாரத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, புதுவாழ்வுத்திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் மற்றும் கால்நடைபராமரிப்புத்துறை மூலம் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளில் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த கண்காட்சியை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாண்டான்விடுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் மரக்கன்றினை நட்டார். மேலும் முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் சார்பில் கொடிநாளுக்காக அதிக வசூல் செய்த தனித்துணை ஆட்சியர் (ஓய்வு) திரு.கருப்பையா அவர்களுக்கு பாராட்டினை தெரிவித்தார்.

இம்முகாமில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சொ.கெங்கையம்மாள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், வேளாண் இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் திரு.சதாசிவம், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சரவணக்குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.சூரியகலா, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.ஜெயபாரதி, வட்டாட்சியர் திரு.யோகேஸ்வரன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திருமதி.தமிழ்செல்விசரவணக்குமார், திரு.திருநாவுக்கரசு, ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.ராஜாத்திதுரை, துணை வட்டாட்சியர் திரு.ஷேக்அப்துல்லா, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**